# இல்லறமே நல்லறம்...

எங்களது திருமண விழாவிற்கு வருகை புரிந்து வாழ்த்தி, எங்களை விழிப்புணர்வு நிலைக்குப் பயணிக்க வைக்கும் உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி!நம் ஒவ்வொருவருக்கும் முக்கிய நாள், நாம் இவ்வுலகில் பிறந்த நாள் ஆகும். இவ்வுடல் பக்குவம் அடையும் காலகட்டமே " ப்ரம்மச்சரியம்" ஆகும். மனம் முதிர்ந்து பக்குவம் அடைவதற்கான குடும்ப [க்ரஹாஸ்ரம] வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கிறோம்! பரந்த மனதில் மற்றவர்க்கு அன்புடன் இடமளிக்க வேண்டும். அதன் மூலம் வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களையும் இன்ப துன்பங்களையும் பகிர்ந்து கொள்ளும் இனிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம்!

பல கோடி ரூபாய்களையும் நேரத்தையும் செலவிட்டுப் பெரியவர்களால் பார்த்து நிச்சயிக்கப் படும் சடங்குகள் பல கொண்ட நம் கல்யாணங்கள் இக்காலத் தலைமுறையினருக்கு உண்மையிலேயே பயனுள்ளதா? என்ற ஒரு கேள்வி எழுகிறது.தம்பதிகளுக்குள் ஒற்றுமை இல்லாததாலும், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மையும் இல்லாததாலும், குடும்ப நபர்களின் அநாவிசயத் தலையீட்டாலுமே இக்காலத்தில் பலருடைய கல்யாண வாழ்க்கை இனிப்பதே இல்லை.இப்ரபஞ்சம் தனக்கு என சில நியதிகளைக் கொண்டு இயங்குகிறது. அந்த இயற்கை நியதிகள் அனைத்தும் தனிமனித வாழ்க்கைக்கும் பொருந்தும். அவற்றைப் பின்பற்றும் போது வாழ்வில் தெளிவு வருகிறது. இதை உணர்ந்த நம் முன்னோர்கள் மக்களுக்கு அவற்றை உணர்த்தவே பல அர்த்தமுள்ள சடங்குகளையும் சம்ப்ரதாயங்களையும் ஏற்படுத்தினர்.ப்ரபஞ்ச தோற்றத்தின் ஆதார சக்தியே ஆண்மை ஆகும். இது மாறாதது!ஆனால் படைக்கும் சக்தியைத் தூண்டி பல மாற்றங்களுடன் ப்ரபஞ்சம் முழுதும் பல்வேறு பொருள்களாய் வடிவம் கொண்டு தோன்ற வைக்கிறது. அந்தத் தோற்ற சக்தியே பெண்மை ஆகும். பெண்மை மாறும் தன்மை கொண்டது. இந்த இரண்டு சக்திகளுமே ஆண் - பெண் உடலிலும் உள்ளன.

*"யதா பிண்டே, ததே ப்ரம்மாண்டே!"*

இப்ரபஞ்சத்தில் இருக்கும் எல்லாமே இவ்வுடலுக்குள்ளேயே உண்டு என்ற உயர்ந்த ப்ரபஞ்ச உண்மையை எங்களுக்குள் உணர இன்று பாரத நாட்டின் கல்யாணச் சடங்குகள் வழிகாட்டுகின்றன. .ப்ரபஞ்சத்தின் மாறும்படும் நியதிகளும் விதவிதமான படைப்புகளும் சக்தி ஆகும்.அச்சக்திக்கு ஆதாரமான மாறாத சக்தியே சிவம் ஆகும். இதுவே சிவசக்தி தத்துவம் ஆகும். அனைத்து செல்வங்களின் விதவிதமான தோற்ற அழகே லக்ஷ்மி எனப்படும். இதற்கு ஆதாரமான நிலையான அறிவே விஷ்ணு எனப்படுகிறது. இந்த இரண்டு தத்துவங்களும் ஆணுக்குள்ளும் பெண்ணுக்குள்ளும் பொருந்தி இருப்பதாலேயே அவர்களை சிவசக்தி ஆகவும் லக்ஷ்மிநாராயணனாகவும் நாம் காண்கிறோம்.ப்ரம்மாண்டமான இப்ரபஞ்சத்தின் உண்மையை அழியும் இந்த சிறு உடலுக்குள் உணர்கிறோம். இதன் மூலம், நாமே இப்ரபஞ்சத்தின் வடிவம் என்ற உயர்ந்த உண்மையை உணர்கிறோம்.எனவே கல்யாணம் என்பது ஆணையும் பெண்ணையும் இப்ரபஞ்சத்தைப் பற்றிய உண்மையைப் பெற வைப்பதற்கே! அதுவே ஆத்ம ஞானம்.

* மணமகளின் அப்பாவோ உடன் பிறந்தவரோ மணமகனின் பாதங்களைத் தொட்டுக் கழுவி மரியாதை செய்வது வழக்கம். இதன் மூலம் மணமகன் ப்ரபஞ்ச படைப்பின் ஆதாரமான தன்னுள் இருக்கும் ஆண்மைத் தத்துவத்தை உணர்கிறான்.அதன் மூலம் தான் ப்ரபஞ்ச நியதிகளுக்குக் கட்டுப்பட்டவன் என்று உணர்கிறான்.

* **வாக் தானம்:**

இரு வீட்டுப் பெரியவர்கள் சபை முன் கூடி கல்யாணத்தை பேசி நிச்சயம் செய்யும் நிகழ்ச்சி இது.கல்யாணம் செய்து கொண்டு அதன் இன்ப - துன்பங்களை அனுபவித்த பெரியோர்கள் தங்களின் அனுபவங்களையே முன்வைத்து ஒரு ஆணையும் பெண்ணையும் இந்த நிச்சயதார்த்தத்தின் மூலம் குடும்ப வாழ்க்கைக்குள் வரவேற்கிறார்கள். ப்ரபஞ்ச தத்துவத்தின் கட்டமைப்பை மணமக்களுக்குள் அடித்தலம் இடும் சடங்கு இதுவே. இதன் மூலம் பல மனச்சங்கடங்களும் இரு கூட்டதிற்கு இடையே தீர்வுக்கு வரும்.

* **கன்னிகா தானம்:**

மணப்பெண்ணின் அப்பா தன் மகளின் கைகளை மணமகனின் கைகளுடன் இணைத்துத் தாரை வார்த்துத் தருதல். இதன் மூலம் இருவரும் ஆன்மீக அறிவை வளர்த்துக் கொள்ள கல்யாண வாழ்விற்கு ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர்.

* **மங்கல ஸ்நானம்:**

மணமக்கள் சந்தனம், மஞ்சள் மற்றும் பல்வேறு வாசனைப் பொருள்களால் புனித நீராடி, புத்தாடை உடுப்பர். இதன் மூலம் அவர்களின் மனதில் உள்ள பழைய தேவை இல்லாத நிகழ்ச்சிகளும் எண்ணங்களும் மறைந்து, புது வாழ்விற்கு தயார் ஆகின்றனர்.

* **மாங்கல்ய தாரணம்:**

மாங்கல்யத்திற்கு " மங்கல சூத்ரம்" என்று பெயர். சூத்ரம் என்றால் உண்மை என்று அர்த்தம்.மங்கலம் என்றால் சத்தியம்

என்ற அர்த்தமும் உண்டு. அதாவது இந்த அணியைக் கட்டுவதன் மூலம் " வாழ்வின் உண்மையை உணர நாங்கள் உறுதி மேற்கொள்கிறோம்!" என்று பந்தப்படுகின்றனர்.தாலியைக் கட்டுவதன் மூலம் பெண்ணின் மனம் ப்ரபஞ்ச சத்தியத்துடன் கட்டப்படுகிறது. இதன் மூலம் பெண்ணின் மனம் குடும்ப வாழ்க்கையில் கவனம் செய்ய வலியுறுத்தப்படுகின்றது.

* **பாணி கிரஹணம்:**

மணமகன் தன் வலது உள்ளங்கையால் மணமகளின் வலக்கையை உறுதியுடன் பிடித்தல். சுயநலமே இல்லாத தூய அன்புடன் சேர்ந்த வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ள உறுதியை வெளிப்படுத்தும் சடங்கிது. காதல் மணமோ பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட மணமோ எதுவானாலும் இந்த உறுதிமனப்பான்மையே இல்லற வெற்றிக்கு மிக முக்கியம் ஆகும்.தன்னலமற்ற கடமைகளுக்கு இடம் கொடுங்கள்! பிறரின் குறை - நிறைகளை உள்ளது உள்ளபடி ஏற்றுக் கொள்ளுங்கள்! இதன் மூலமே நம் கர்வம் அடங்கும். எவ்வித ப்ரச்சனைக்கும் உணர்ச்சி வசப்படாதீர்கள்! அப்பிரச்சனையை அறிவுப் பூர்வமாக இருவரும் கலந்து பேசித் தீர்வு காணுங்கள். இதுவே ஒருவரை ஒருவர் வழிநடத்தி உதவும் பக்குவம் ஆகும். சுயநலமே இல்லாத குடும்பக் கடமைகள் மூலம் மட்டுமே உங்கள் திருமண பந்தம் பலமாகிறது. அதன் மூலம் தான் விழிப்புணர்வு ஏற்படும்.

* **சப்தபதி, (அக்னி சாட்சியாய் வலம் வருதல்):**

மணமகன் தன் மனைவியின் கையைப் பிடித்து, இருவரின் மேலாடைகளும் முடிச்சிட அக்னியை வலம் வருவர். ஞானமே இல்லறத்தின் வழிகாட்டி என்று இது உணர்த்துகிறது. ஏனெனில் அக்னி தூய ஞானத்தின் குறியீடு ஆகும்.அதனைத் தொடர்ந்து ஏழு மந்திரங்களை சொல்லியபடியே ஏழு அடி முன் நடப்பர்.இதுவே சப்த பதி. இச்சடங்கின் மூலம் இருவரும் ஒப்பில்லாத ஸ்நேகிதர்கள் ஆகின்றனர். இருவரும் இணைந்தே இல்லறத்தை நடத்த வேண்டும். உண்மையான இல்லற வாழ்வில் ஒருவரை ஒருவர் அடிமைப் படுத்தும் எண்ணத்துக்கு இடமே இல்லை. பொறுப்புணர்வுடன் நம் கடமைகளை நிறைவேற்ற பரிபூர்ண சுதந்திரம் தம்பதிகள் இருவருக்குமே உண்டு.இருவரும் சமம்!உணர்ச்சிக்கு ஆளாகாமல் அன்புடன் பிறர் சேவையை அங்கீகரியுங்கள்! பாராட்டியும் வாழுங்கள்! எப்போதும் உணர்ச்சிக்கே ஆளாகி இருவரும் எப்போதும் அவசியத்தின் அடிப்படையில் அன்பு பாராட்டினால் அவ்வன்பு நாளடைவில் கசக்கும், சித்ரவதைக்கு ஆளாக்கும்.பாராட்டும், அன்பின் வெளிப்பாடும் இயற்கையாக இருக்க வேண்டும். பாராடுக்கள் மூலம் தான் நாம் கடமைகளைச் செய்ய முடியும் என்ற மனப்பான்மை இருக்கவே கூடாது.யார் இம்மாதிரியான சுயநலமே இல்லாத அன்புடன் உணர்ச்சிகளுக்கு ஆளாகாது, அறிவுடன் செயல்பட்டு குடும்பம் நடத்துகிறார்களோ அவரே ஸ்ரீராதாக்ருஷ்ண நிலைக்கு உயர்கின்றனர்.

* **மெட்டி அணிதல்:**

மணமக்கள் இருவருமே பாதங்களில் வெள்ளி மெட்டி அணிகின்றனர். இருவரின் மனமும் கட்டுப்பாடான இல்லற வாழ்க்கைக்கு இதன் மூலம் திசை திருப்பப்படுகிறது. முக்கியமாக மணமகன் இதை வாழ்நாள் முழுதும் அணிதல் அவசியம். ஏன் என்றால் இது ஆண்மகனுக்கு உரிய கல்யாண அணி ஆகும். நாற்பத்தியொரு நாட்களுக்காவது ஆண்கள் அணிவது நல்லது.

* **சாந்தி முகூர்த்தம்:**

அனைத்து உன்னதச் சடங்குகள் மூலம் தம்பதிகள் ஆகிவிட்ட ஆணும் பெண்ணும் இனி உலகில் தாங்களாகவே இல்லறத்தை வழிநடத்த வேண்டும். தங்களை தெய்வீக திவ்யத் தம்பதிகளாய் அடையாளம் கண்டு வாழ வேண்டும்.முதல் இரவில் ஆண் மகன் தன் கர்வத்தை விட்டு மனைவியை தெய்வமாக வணங்கி, அவள் பாதத்தில் நமஸ்கரிக்க வேண்டும். இதுவே அவன் முதலும் கடைசியுமாய்த் தன் மனைவியை விழுந்து வணங்கும் கட்டமாகும். மனைவியும் கணவனை வணங்கி, ஒருவரை ஒருவர் உடலால், மனதால், வாக்கால், செயலால் பூரணமாக உணர்ந்து தாம்பத்ய வாழ்வைத் தொடங்க வேண்டும்.

* **வானப்ரஸ்தம்:**

இல்லறக் கடமைகளைச் சரிவரச் செய்துவிட்டு மெதுவாக தாமரை இலை மேல் தண்ணீர் போல் உணர்ச்சிக்கு ஆளாகாமல் வாழ்தல் அடுத்த கட்டம். இதற்கு வீட்டுப் பெரியவர்கள் இடம் தருவது மிகவும் அவசியம். புதுத்தம்பதியினரிடம் இல்லறப் பொறுப்புகளை முழுமையான நம்பிக்கையுடன் ஒப்படைத்து, பின்னிருந்து அவர்களுக்குத் தேவையான சமயத்தில் மட்டும் வழிகாட்டிட வேண்டும். ஆனால் இன்று அனேக வயதான தம்பதிகள் வானப்ரஸ்த வாழ்க்கைக்கே வருவதில்லை! பிள்ளைகைளின் கல்யாணத்திற்குப் பின்னரே அதிகம் க்ரஹஸ்ரமத்தில் ஒட்டிக் கொண்டு இடைஞ்சல்கள் செய்வதையே பார்க்கிறோம். இதன் பலன் தான் இன்று நம் நாட்டில் அதிகமாகி வரும் முதியோர் இல்லங்கள்! புதிய தம்பதிகளும் பெரியவர்களின் நியாயமான வார்த்தைகளை மதித்தல் மிக மிக அவசியம். அது குறைவதால் தான் இன்று பல தம்பதிகள் நீதிமன்றங்களுக்குப் போக வேண்டிய அவலம் வந்துள்ளது!

**மணமக்கள்:** திரு. எ.சுதாகர் - திருமதி. மணிமேகலைசுதாகர், **Thanks: sakthifoundation, www.uni5.org**